காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

# CROSSCURRENTS

## Masterpieces of Mughal, Safavid, and Ottoman Art from the Musée du Louvre

19 June 2026 – 24 Jan 2027




EXHIBITION ORGANISED BY
THE MUSÉE DU LOUVRE, PARIS AND
THE ASIAN CIVILISATIONS MUSEUM, SINGAPORE

LOUVRE

ACM

# காட்சி கூடத்தின் வரைபடம்



# 1 குறுக்கே ஓடும் கலை ஓட்டங்கள்: தி லூவர் அருங்காட்சியகத்திலிருந்து முகலாய, சபாவித்து மற்றும் ஒட்டோமான் பேரரசின் தலைசிறந்த கலைப்படைப்புகள்

16 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை, முகலாய, சபாவித்து மற்றும் ஒட்டோமான் உலகங்கள் ஆசியா முழுவதும் பரந்த மற்றும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்ட மாகாணங்களை உருவாக்கின. காட்சிப்பொருள்களும், மற்ற பொருள்களும், தொழில் திறன்களும் இந்த பேரரசுகளுக்கிடையே நகர்ந்தன, கலைபாணிகளும் மற்றும் தொழில்நுட்பங்களும் தழுவப்பட்டு மற்றும் மறுவேலை செய்யப்பட்டு உள்நாட்டு மரபு சார்ந்த படைப்புகளின் பக்கமோடு பக்கமாக பகிர்ந்துகொள்ளப்பட்ட காட்சி மொழிகள் எழும்பின.

கண்காட்சி இரண்டு தளங்களில் விரிந்துள்ளது காட்சிக்கூடத்தின் வலப்பக்கம் நுழைந்து முகலாய இந்தியா மற்றும் சபாவித்து ஈரானை ஆய்வு செய்யுங்கள் பிறகு 3-ஆம் தளத்தில் ஒட்டோமான் உலகத்தை தொடருங்கள்.. மைய படிக்கட்டு இந்த இழைகளை ஒன்றிணைக்கிறது, மூன்று பேரரசுகளின் வரைபடம் மற்றும் விளக்கப்பதாகையை கொண்டு இந்த கண்காட்சி எப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற பின்னணியை அறிமுகப்படுத்துகின்றது. இந்த இடங்களை நீங்கள் ஆய்வு செய்கின்றபோது காட்சிப் பொருள்கள் என்ன பகிர்கின்றன மற்றும் எங்கே மாறுபடுகின்றன என்பதை கவனத்தில் கொள்ளுங்கள், என்ன தெரிந்ததாக உள்ளது மற்றும் எது எதிர்பாராதது?

## 2 குறுக்கே ஓடும் கலை ஓட்டங்கள்: தி லூவர் அருங்காட்சியகத்திலிருந்து முகலாய, சபாவித்து மற்றும் ஒட்டோமான் பேரரசின் தலைசிறந்த கலைப்படைப்புகள்

19 ஜூன் 2026 – 24 ஜனவரி 2027

16ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை, இந்தியாவில் முகலாயர்கள், ஈரானில் சஃபவித் பேரரசு, மற்றும் துருக்கியில் ஒட்டோமன் பேரரசு ஆகிய மூன்று பெரிய பேரரசுகள் ஆசியா முழுவதும் பரந்தும் பரஸ்பரம் இணைந்தும் இருந்த ஒரு உலகை வடிவமைத்தன. இந்த காலம், உலக வர்த்தகத்தையும் அரசியலையும் ஐரோப்பிய விரிவாக்கம் மறுவடிவமைத்து கொண்டிருந்த போதிலும், இப்பேரரசுகளின் செல்வாக்கு உச்சத்தை எட்டியிருந்த காலமாகும். அவர்கள் உருவாக்கிய கலைப்பணிகள்

ஆட்சித்தன்மை, நுட்பமான ரசனை, மற்றும் பேரரசு உயர்வாசை ஆகியவற்றை வெளிப்படுத்தின; அவை அதிகாரத்திற்கு தெளிவான காட்சியுருவை அளித்தன.

## இயக்கத்தில் பேரரசுகள்

பரஸ்பர தொடர்புகளின் மூலம் பொதுவான காட்சிமொழிகள் உருவாகியிருந்த போதிலும், உள்ளூர் மரபுகள் தொடர்ந்து நிலைத்திருந்தன.
புறநிலையிலிருந்த பகுதி அல்லாமல், தென்கிழக்காசியாவும் இத்தகைய பரிமாற்றங்களில் செயற்பாட்டுடன் முக்கிய பங்கு வகித்தது. மத்திய கிழக்குடன் நடைபெற்ற வர்த்தக உறவுகளும் இஸ்லாமின் பரவலும், ஆச்சே, பாண்டென், ஜோகூர் போன்ற வர்த்தக அடிப்படையிலான சுல்தானகங்களின் எழுச்சியை ஊக்குவித்தன; அங்கு புதிய கலைவடிவங்கள் உருவெடுத்தன.

## கண்காட்சியில் பயணிப்பது

இந்தக் கண்காட்சி, லூவ்ர் அருங்காட்சியகத்தின் அரசகுடும்பத் தொகுப்புகளிலும் பின்னர் சேர்க்கப்பட்ட சேகரிப்புகளிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு சிறப்புக் கலைப்பணிகளை முன்னிறுத்துகிறது. மேல்தள ஒட்டோமான் உலகத்தை தொடர்வதற்கு முன் மொகலாய இந்தியா மற்றும் சபாவித்து ஈரான் காட்சிக்கூடம் வழியாக பயணம். ஆசிய நாகரிகங்களின் அருங்காட்சியகமான ACM-இன் சேகரிப்பில் உள்ள தென்கிழக்காசியப் பொருட்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பு, பல்வேறு மரபுகளை உரையாடலுக்குள் கொண்டு வந்து, தொலைதூரப் பகுதிகளை இணைத்த கலாச்சாரப் பரிமாற்றங்களின் ஓட்டங்களை வெளிப்படுத்துகிறது.

## 3 அரச மாளிகையிலிருந்து தேசிய அரும்பொருளகம் வரை

முதலில் ஒரு அரச மாளிகை, லூவர் தேசிய அரும்பொருளகமாக 1793-ல் பிரஞ்சி புரட்சியின் போது ஆனது. அதில் இருப்பவைகள் 16ஆம் நூற்றாண்டு முதல் அரச சேகரிப்புகளால் உருவானது, புரட்சியின் போது கைப்பற்றப்பட்டவைகளோடு பிறகு கைப்பற்றவைகளும்.இஸ்லாமிய வேலைப்பாடுகள் ஆரம்பத்தில் ஐரோப்பிய கலைப்பொருள்களோடு காட்சிப்படுத்தப்பட்டன, 19 ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஒன்றாக தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டன. 2012-ல் முற்றிலும் அதற்கான காட்சிக்கூடம் ரூடி ரிச்சியொட்டி மற்றும் மரியோ பெலினியால் வடிவமைக்கப்பட்டு அங்கே வைக்கப்பட்டன. 14ஆம் நூற்றாண்டு வரை விரிந்த ஸ்பெயின் முதல் இந்தியா வரையான இஸ்லாமிய

கலைப்பொருள் சேகரிப்பு இன்று 20,000 க்கும் மேல் அடங்கும்.

## அரச ஆதரவு

ஆரம்ப சேகரிப்புகளை உருவாக்குவதில்  அரச ஆதரவு முக்கிய பங்காற்றியது. முக்கிய சேகரிப்புகளிலிருந்து வாங்கியதால் பதினான்காம் லூயிக்கு (1638-1715) கீழ் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை பெற்றது. வாங்கியவைகளுள் அகேட், மரகதம் மற்றும் படிகப்பாறைகளில் செதுக்கப்பட்ட கருங்கல் பாத்திரங்கள், சில மெகலாயர்களிடம் இருந்தும் சில ஒட்டோமான் உலகத்திலிருந்தும் வந்தவை. அரச இல்லங்களிலும், லூவர் மற்றும் வெர்சலிசிலும் காட்சிபடுத்தப்பட்டன, இஸ்லாமிய உலகத்திலிருந்து முதலில் வந்த சேகரிப்புகளில் இவையும் அடங்கும்.

## முகலாய இந்தியாவின் அற்புதம் (1526-1858)

பழைமையானதால் நிலம் வழியாவும், கடல் வழியாவும் பொருள்களும், யோசனைகளும் பரிமாற்று மையமாக இந்தியா திகழ்கிறது. தைமூராலும் செங்கிஸ் கானாலும் நாடு இழந்த பாபரால் 1526-ல் முகலாயப் பேரரசு நிறுவப்பட்டது. அவர் டெல்லியை கடைசியாக ஆண்ட இப்ராஹிம் லோடியை தோற்கடித்து உலகின் ஆகப்பெரிய பேரரசுகளில் ஒன்றாக்க அடிகோலினார்.

### பொற்காலம்

மொகலாய கலை பல்வேறு உள்ளூர் பாரம்பரியத்துடன் பாரசீக அரசவை கலாச்சாரம் ஊடுருவி கலந்து உருவானவை. அக்பர், ஜஹாங்கீர் மற்றும் ஷா ஜஹான் கீழ் 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் இந்த பொற்காலம் செழித்தது. அக்பரின்

கீழ் பேரரசு வலுப்படுத்தப்பட்டு பாரசீகம் ஆட்சி மொழியாக அங்கிகரிக்கப்பட்டு அரசவை விரிவான இஸ்லாமிய உலகத்தோடு நெருக்கமாக இணைந்தது.

## விரிவாக்கமும் மற்றும் உருமாற்றமும்

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஔரங்கசீப்பின் கீழ் பேரரசு ஆகப்பெரிதாக விரிவடைந்தது. 18 ஆம் நூற்றாண்டில் மாகாண அதிகார சக்திகளும், ஈரானின் ஷாவான நாதிர் ஷாவின் படையெடுப்பு உட்பட வெளி நாட்டு அழுத்தங்களும் அதிகரித்தன. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் வளர்ந்து கொண்டிருந்த ஆதிக்கம் அரசியல் தளத்தை மறு உருவாக்கம் செய்து 1858 ல் முகலாய ஆட்சிக்கு முடிவுகட்டியது.

## 5 முகலாய அழகியல் கட்டுமானம்

முகலாய பேரரசின் பரவல் 16 ஆம் நூற்றாண்டில் துணை கண்டத்தில் அழகியல் படைப்புகளுக்கு ஒரு புதிய கட்டத்தை குறிக்கிறது. ஓவிய கலைஞர்கள் தைமூரிய மரபில் மத்திய ஆசிய மற்றும் பாரசீக கூறுகளை இணைத்து உள்ளூர் பாணியில் வரைந்தார்கள். இந்த வடிவாக்கம் அரச முகலாய பட்டறைகள் பாரசீக ஓவிய கலைஞர்களின் வழிகாட்டுதலோடு சபாவித்துகள் அரசவையோடு இருந்த இணைப்பை உறுதி செய்கிறது. இவற்றின் தாக்கம் ஒரு தனித்துவமான அரசவை சார்ந்த பாணியை உருவாக்கியதோடு ஐரோப்பிய கூறுகளையும் இணைத்திருந்தன.

### பொருள்களால் ஆன ஆற்றல்

முகலாய பாணி இந்திய இயற்கையோடு இணைந்தது –

குறிப்பாக மிருகங்கள் மற்றும் தாவரவியல் வடிவங்கள் – விலைமதிப்பற்ற மரகதம், தந்தம் மற்றும் ரத்தினங்களுடன். இந்த விலைமதிப்பில்லா பொருள்கள் ஆசியா முழுதும் மற்றும் அதை தாண்டியும் விரிவாக பரவியிருந்தது, அதன் ஒளி ஊடுறுவும் தன்மையும், பட்டை தீட்டியதாலும் வரையப்பட்ட பொருள்களின் தோற்றத்தை மேம்படுத்தி காட்டின.

## 6 இந்திய பெருங்கடலின் முழுவதுமான எதிர்கொள்ளல்கள்

16 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய விரிவாக்கம் இந்திய பெருங்கடல் வழியாக நடந்த வர்த்தக முறைமைகளை மறுஉருவாக்கம் செய்தது. ஐரோப்பிய அதிகார சக்திகள் – முதலில் போர்ச்சிகீசியர்களும், பின்னர் டச்சிக்காரரர்களும்

மற்றும் ஆங்கிலேயர்களும் கடல் வணிகத்தை கட்டுப்படுத்த செய்தார்கள். கச்சா பொருள்கள், புத்தகங்கள் மற்றும் பொருள்களின் பரவல் புதிய வடிவங்களை ஊக்குவித்தன அந்த ஐரோப்பிய , பாரசீக மற்றும் முகலாய இணைந்த தாக்கங்கள், வடிவமைப்பு மற்றும் பயன்பாடு இரண்டையும் மாற்றியது.

## தவரவியல் உருவங்களின் பரிணாம்

மொகலய இயற்கைவாதம் தாவரவியல் செதுக்கள்கல் மற்றும் அச்சிட்ட படைப்புகள்  16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வந்த இயேசு மறைப்பணி சபையால் வடிவம் பெற்றது. ஓவிய கலைஞர்கள் உருவாக்கிய மலர் வடிவமைப்புகள் மூலிகைச் செடிகளால் ஈர்க்கப்பட்டு முன் தொற்றம் மற்றும் பக்கத் தோற்றம் ஆகியவற்றை இணைத்து இலைகளுக்கும் இதழ்களுக்கும் இயக்கம் தந்தார்கள். 17 ஆம்

நூற்றாண்டின் மத்தியில் இந்த வடிவங்கள் சமச்சீருடைய அலங்கார பாணிகளாக உருமாற்றமடைந்து மொகலாய அரசவை பாணிகளோடு தொடர்புடையதாயின.

## உலோகத்தில் எதிரொலிகள்

இந்த சமயத்தில் கூட பார்க்கலாம் பிட்ரியின் வெளிப்பாட்டை, ஆதியில் ஒரு தக்காண ஓவிய நுட்பம்,, இதில் கருமையாக்கப்பட்ட துத்தநாக உலோகக்கலவையில் வெள்ளி பதிக்கப்பட்டிருக்கும். இந்த அதிக நிற வேற்றுமை வடிவங்கள் இந்திய பெருங்கடல் முழுவதும் பயணித்தது, இஸ்லாமிய தென்கிழக்கு ஆசியவின்  உலோக வேலைப்பாட்டு மரபுகள் ஆதிக்கம் செலுத்தியது, அங்கே ஒரே மாதிரியான வடிவமைப்புகள் வெவ்வேறு முறைகளில் உருவாக்கப்ப்ட்டன. இப்படியான இணைகள் யோசனைகளும், வடிவங்களும்

இந்தியப் பெருங்கடலின் எல்லா பக்கங்களிலும் பரவியதை பிரதிபலிக்கிறன.

7 ## ஈரானிய சபாவித்துகளின் நளினம் (1501–1736)

ஆர்மீனியாவிலிருந்து ஆப்கானிஸ்தான் வரை பரந்திருந்த நிலப்பரப்பை ஒருங்கிணைத்து 1501 ஆம் ஆண்டு ஷா இஸ்மாயில் சபாவித்து வம்சத்தை நிறுவினார். அவர் ஷியா பிரிவை அரசின் அதிகாரப்பூர்வ மதமாக தனது அண்டை நாட்டு மதமான ஆற்றல் மிக்க சன்னிக்கு மாறாக நிறுவினார். மேற்கிற்கு ஒட்டோமான்கள் , வடகிழக்கிற்கு உஸ்பொக்கிகள் மற்றும் கிழக்கிற்கு மொகலாயர்கள். 1555-ன் அமாஸ்யா அமைதி ஒப்பந்தம் ஒட்டோமான்களுடன் நிரந்தர போர் நிறுத்தத்தை குறிக்கிறது.

## உலகின் பாதி : இஸ்பஹான்

ஷா அப்பாஸ்- I 1587-ல் ஆட்சி பொறுப்பேற்றார். அவரின் ஆட்சிக்காலம் நிலைத்தன்மையை கொண்டு வந்தது , வர்த்தகத்தை ஊக்குவித்தது மற்றும் ஐரோப்பிய அதிகார சக்திகளுடன் பரிமாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டது. இஸ்பஹானுக்கு தலை நகரத்தை மாற்றியது மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை ஷா நேரடியாக மேற்கொள்ள பங்குவகித்தது. நினைவிடங்கள் பிரகாசமான வண்ண செராமிக் ஒடுகளால் அலங்கரிக்கப்பட்டது நகரத்தின் ஒரு அடையாளமானது, அதுதான் பிரபலமாக அறியப்பட்ட நெஸ்ஃப்-இ ஜஹான் (“பாதி உலகம்”).

## ஒரு யுகத்தின் முடிவு:

ஷா அப்பாஸ்- I -ன் வாரிசுகள் ஒரு வளமையை பராமரித்தாலும் , அரசு

அதிகாரம் அடுத்த நூற்றாண்டில் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்தது. சபாவித்து ஆட்சி 1736-ல் முடிந்தது, அதை தொடர்ந்து காண்டகாரின் ஆப்கான் கல்சாய்களின் புரட்சி, அஃஷரிட் வம்ச ஆட்சிக்கு வழி வகுத்தது.

## 8 ஒரு பேரரசை கட்டிஎழுப்புதல்

சபாவித்து காலம்  கலைப் பொருள் உருவாக்கம் வர்த்தக அதிகரிப்பு மற்றும் பெரிய அளவிலான பட்டறை நிர்மாணங்களால் குறிப்பிடப்படுகின்றது. விரிவான வடிவமைப்புகளுடனும் மற்றும் தொழில் நுட்பங்களுடனும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக செராமிக் உற்பத்தி விரிவானது,  பாரசீக இலக்கியத்தின் உயர்ந்த மரபின் மீது வரையப்பட்ட உருவக்காட்சிகள் மற்றும் செதுக்கப்பட்ட கவிதைகள்

குறிப்பாக பிரபலம்,

## வர்த்தக கவிதைகள்

இந்த தலைப்பு இரு இளையர்கள் கவிதை போட்டியில் ஈர்க்கப்பட்டதை காட்டுகிறது, ஒரு கவனமான கவனிப்பாளர் மற்றும் ஒரு மூடப்பட்ட உணவை வைத்திருக்கும் ஒரு பெண்ணும் பக்கவாட்டில் சூழ்ந்திருக்கிறார்கள். ஒருவர் ஒரு கவிதை வரியை சொல்ல அவர்க்கு துணையாக உள்ளவர் அதை சஃபினாவில் பதிவு செய்ய வேண்டும், அது நீள்வட்ட எழுத்துக்கலை ஆல்பம். துடிப்பான மெருகூட்டல்கள், ஒரு ஒளி புகா வெள்ளை தரை கருப்பு கோடுகளால் வெளி எல்லைப்படுத்தப்பட்டது, அதிக வேலை பிடிக்கும் செராமிக் மொசைக்கிற்கு மாற்றாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை பிரதிபலிக்கிறது. அப்படிப்பட்ட பலகைகள் அரச வளாகத்தின்

மண்டபங்களின் பகுதிகளை உருவாக்கின. அவைகள் கீழ்புற சுவர்களிலும்,, சுவரோவியங்களுக்கு அடியிலும் இடப்பட்டன,, அவை ஒரு நாளின் வெவ்வேறு நேர அரச பொழுதுபோக்கை வெளிக்காட்டும் அலங்கார அடுக்குகளின் ஒரு பகுதியாய் உள்ளது..

**கவிதைப்போட்டி ஒட்டுப்பலகை**
ஈரான், 17-ஆம் நூற்றாண்டின் மத்தியபகுதி
பளபளப்பான செராமிக்
இஸ்லாமிய கலைகள் துறை
லூவர் அருங்காட்சியகம், பாரிஸ், பிரான்ஸ் , வாங்கியது 1893, OA 3340.

## 9 வழிபாட்டு நடைமுறைகள்

சபாவித்து வம்சத்தின் கீழ் ஷியா இஸ்லாம் நிர்மாணிக்கப்பட்டு நாட்டின் அதிகாரப்பூர்வ மதமானது. 632-ல் நபிகள் நாயகம் இறந்த

பிறகு ,சன்னி மற்றும் ஷியா பிரிவு இஸ்லாமிய அரசியல் மற்றும் சமய தலைமைத்தும் சார்ந்த கண்ணோட்ட வேறுபாட்டில் நிலைபெற்றது, சன்னி முஸ்லீம்களின் நம்பிக்கை தலைவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது, அதே நேரத்தில் ஷியா முஸ்லீம்கள் தலைமைத்துவம் என்பது தெய்வ உரிமை அது நபிகள் நாயகத்தின் நேரடி வாரிசுகளுக்கானது என்பது.

## சடங்கு நடைமுறைகள்

ஷியா சமய வழிபாடுகள் சமயத் தலைவர்களின் பிறப்பு , இறப்பு போன்றவை நாடுமுழுவதும் அதிகாரப்பூர்வமாக கொண்டாடப்பட்டது. இது எண்ணற்ற அழியாத பொருள்கள், ஊர்வலங்களில் எடுத்துச்செல்லப்பட்ட பதாகை துண்டுகள் போன்றவற்றில் பிரதிபலிக்கிறது.

## இலக்கிய கலாச்சாரம்

வெட்டெழுத்துகள் பொறிக்கப்பட்ட பொருள்கள் இஸ்லாமிய உலகத்தின் நீண்டகால மரபின் ஒரு பகுதியாகும். சபாவித்து காலத்தில் மேல்தட்டு கலாச்சார மக்களுக்காக செய்யப்பட்ட உலோகங்கள் மற்றும் செராமிக்குகளில் கற்பனை கவிதைகளும், பொழுது போக்கு சொல்லாடல்களும் வெட்டெழுத்துகளால் பொறிக்கப்பட்டிருந்தன.

## அரசவை கைவினைபொருட்கள்

உலோகப் பொருள்களின் பரந்த பயன்பாட்டுக்கு அழியாமலுள்ள ஓவியப்படைப்புகளும் மற்றும் சபாவித்து வம்ச ஆட்சிகாலத்தைய ஐரோப்பிய யாத்திரிகர்களின் குறிப்புகளும் அத்தாட்சியாகிறது. அரசவையில் விலை உயர்ந்த உலோகத்தாலான சமையல் மற்றும் சாப்பாடு பரிமாறும்

பாத்திரங்கள் சீன மற்றும் பாரசீக செராமிக் பாத்திரங்களோடு இடம் பெற்றிருந்தன. உலோகங்கள் மெழுகுவர்த்திகள், கொள்கலன்கள் மற்றும் ஆயுதங்களுக்கு கூட கச்சாப்பொருள் தெரிவாக இருந்தது. இந்த பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள பொருள்கள் பெருமைப்படுதல், மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கிற்கான ஆதரமாக கூட இருந்தன.

## பரிமாறிக்கொள்ளப்பட்ட மரபுகள்

15 ஆம் நூற்றாண்டு முதல் பாரசீக மொழி மற்றும் இலக்கியத்தின் ஆதிக்கம் இஸ்லாமிய தென்கிழக்காசியாவை அடைந்தன, மலாய் தொடர் வரலாற்று நூல்கள் (ஹிகாயட்) பாரசீக இதிகாசங்கள் மற்றும் சூஃபி கவிதைகளை தழுவி எழுதப்பட்டன. இந்த படைப்புக்கள் அறம் சார்ந்த செறிவான நடத்தையை(அடாப்) தென்கிழக்கு

ஆசியா வாழ்வியல் மற்றும் கலைக்குள் ஒருங்கிணைத்தது, பகிரப்பட்ட பாராட்டக்கூடிய இலக்கிய மரபுகள் இவற்றை பிரதிபளிக்கின்றன.

## 11 சீனாவும் ஈரானும்

17 ஆம் நூற்றாண்டு முழுவதும் உலக வர்த்தகம் செழித்தது. பாரம்பரிய நில பயணத்தடங்கள் சுறு சுறுப்பாக இருந்தன அப்போது ஐரோப்பிய விரிவாக்கம் கடல் பயணத்தடத்தை அதிகமாக வடிவமைத்தது. மிங் வம்சத்திலிருந்து சிங் வம்சத்திற்கு ஆட்சி மாறும் சமயம்,சீனா பட்டுச் சாலையிலும் கடல் தடகட்டமைப்பு வழியிலும் வர்த்தகத்தை தீவிரப்படுத்தியது, ஏராளமாக எண்ணிக்கையில் பீங்கான்களை ஏற்றுமதி செய்தது. இதற்கிடையில் ஷா அப்பாஸ்- I ஆங்கிலேய மற்றும் டச்சு கிழக்கிந்திய கம்பெனிகளை

ஈரானில் வரவேற்றார், போர்ச்சுக்கலின் வர்த்தக ஏகாதிபத்தியம் கீழிறக்கிங்கியது. இந்த பொருள்களின் வரத்து பாரசீக சந்தையை மாற்றியது , புதிய வடிவ உற்பத்தி மற்றும் பண்ட மாற்றை ஊக்குவித்தன.

## நீல மற்றும் வெள்ளை வசீகரம்

சீன நீல மற்றும் வெள்ளை பீங்கான் மேல்தட்டு சபாவித்துக்களுக்கு மதிப்பின் அடையாளமாக ஆகியது, அரிதாக கிடைப்பதும் அதன் தொழில் நுட்ப நுணுக்கங்களும் அதை விலைமதிப்புள்ளதாக்கியது. சபாவித்து பட்டறைகள் இந்த இறக்குமதியோடு போட்டியிட அதிக அழுத்தத்தை எதிர்கொண்டன, உள்ளூர் குயவர்கள் சீன பாண்டங்கள் போன்ற தோற்றத்தை மறுஉருவாக்கம் செய்ய முயற்சித்தார்கள். ஆரம்பத்தில் சீன வடிவமைப்புளின் நகல்

போன்று செய்தவர்கள் , பாரசீக விவரிக்கும் காட்சிகளையும் மலர் வடிவமைப்புகளையும் கூட ஒருங்கிணைத்தார்கள், துடிப்புமிக்க ஒரு கலவை பாணிக்குள் இந்த கூறுகளை ஒருங்கிணைத்தது.